மாசாய் குழுவகத் தமிழ்ப்பள்ளி
தமிழ் மொழி ஆண்டு 5 தொகுதி 18
சரியான விடையுடன் இணைக்கவும்.

1. மனச்சிதைவு நோயின் முக்கியக் காரணங்கள் யாவை?

2. இந்நோய் கண்டவர்களிடம் காணப்படும் மாற்றங்கள் யாவை?

3.குடும்ப உறுப்பினர்கள் நண்பர்களுடன் சண்டை போடுவதன் காரணம் என்ன?

4. மனச்சிதைவு கண்டவர்களுக்கான உடனடி நடவடிக்கை என்ன?

LIVEWORKSHEETS

**5. இந்நோயினால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் யாவை?**

**6. நோயாளிகள் மருந்துகளைத் தவிர்த்து, செய்ய வேண்டிய நடவடிக்கைகள் யாவை?**

## விடைகள்

நோயாளிகள் மருந்துகளைத் தவிர்த்து யோகாசனம்,தியானம்,மெதுநடை போன்ற எளிமையான பயிற்சி போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

நடத்தையில் மாற்றம் ஏற்படுதல், தனக்குத்தானே பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருத்தல், பேச்சினில் குழப்பம், தெளிவில்லாத சிந்தனை,தினசரி நடவடிக்கையில் மாற்றங்கள் ஆகியவையே இந்நோய் கண்டவர்களிடம் காணும் மாற்றங்கள் ஆகும்.

மூளையில் உள்ள சில இரசாயனக் குறைபாடுகள் ,மரபு வழி ஏற்படும் சிக்கல் மற்றும் போதைப் பொருள்கள் உட்கொள்ளுதல் ஆகியனவே மனச்சிதைவு நோயின் முக்கியக் காரணங்கள் ஆகும்.

மனச்சிதைவு கண்டவர்களுக்கான உடனடி நடவடிக்கை மருத்துவரிடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதாகும்.

இந்நோய் கண்டவர்கள் தன்னைப் பற்றிய குறைகளை அனைவரும் பேசுகிறார்கள் என்றும் தன்னைப் பின் தொடர்ந்து வருகிறார்கள் என்றும் நினைப்பதால் இவர்கள் குடும்ப உறுப்பினர்கள் நண்பர்களுடன் சண்டை போடுகின்றனர்.

கல்வியில் கவனம் செலுத்த முடியாது மற்றும் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்படுவதே இந்நோயினால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் ஆகும்.

LIVEWORKSHEETS